DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 369/2024

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பால குமரன் |
| Father's Name | : | கண்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.02.2026.

**1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர், சுங்ககேட், காவேரி நகரில் குடியிருந்து பிலிப்காட் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் கார்த்திக் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 08.05.2024ம் தேதி காலை

11.00 மணியளவில் நான் சொந்த வேலையாக சென்றிருந்தபோது, செல்போன் திருடு சம்மந்தமாக தாந்தோணிமலை போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், கார்த்திக்கும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை ( 2ம் எதிரி தரப்பில்)**

நான் டிப்ளமோ வரை படித்துள்ளேன். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எங்களது கம்பெனியில் டெலிவரி பாயாக வேலை பார்க்கும் நபர் ஆவார். பட்டியல் சாட்சி 2, சாட்சி 3 எங்களது கம்பெனியில் டெலிவரி பாயாக வேலை பார்க்கும் நபர் ஆவார்கள். அ.சா.1 எனது கம்பெனியில் வேலை பார்க்கும் நபர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ( 1ம் எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 369/2024

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | முருகன் |
| Father's Name | : | பெருமாள் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.02.2026.

**1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பூங்கா நகரில் குடியிருந்து டைலர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் ஒரு

நபர் கையொப்பம் செய்தார். அவர் பெயர் தற்போது ஞாபகமில்லை. ராயனூர் பஸ்டாப் அருகே 08.05.2024ம் தேதி நின்று கொண்டிருந்தபோது, போலிசார் ஆஜர் எதிரிகளை பிடித்து விசாரித்தனர். பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்து இரும்பு கடையில் வேலை செய்யும் நபரிடம் செல்போனை பறித்ததாகவும் கூறினார்கள். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 08.05.2024ம் தேதி 14.15 மணியளவில் ஆஜா எதிரி சிவக்குமார் (எ) கிஷாபாயை பிடித்து விசாரித்தபோது, தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், 2 வது எதிரி பீமாசாரதி உடன் சேர்ந்து கருப்ப கவுண்டன் புதூர், காந்தி நகர், ஸ்டார் மளிகைக் கடை அருகில் ஓப்போ ஏ 55 ஆன்ராய்டு செல்போனை, சுங்ககேட், ஆதி விநாயகர் கோவில் அருகே டுவீலருடன் நின்றுக்கொண்டிருந்தவரிடம் பேச்சுக் கொடுத்து வீவோ வி22 செல்போனையும், தெரஸா பள்ளி அருகில் டேண்க் கவரில் இருந்து ஒரு ரெட்மீ செல்போனையும், வெங்கக்கல்பட்டி ரவுண்டான அருகில் டுவீலரில் வந்த நபரிடம் சாம்சங் கேலக்சி செல்போனையும் திருடியதாகவும், அதற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும் ஆஜர்படுத்தியதை போலிசார் கைப்பற்றுதல் மகசர்களில் கைப்பற்றியதகாவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி மற்றும் நானும் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை ( 2ம் எதிரி தரப்பில்)**

நான் அரசு தரப்பின் முதல் விசாரணையில் சொன்னது மட்டும்தான் உண்மை என்றால் சரிதான். இரண்டாவது குறுக்கு விசாரணை செய்த விவரங்கள் பொய் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது நண்பர், உறவினர், தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்ய சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை தற்போதுதான் முதல்முறை பார்க்கிறேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை ( 1ம் எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./−எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**